# தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மார்கழி 11 (26-12-'59). சனிக்கிழமை | இதழ் 28


## கங்கண்ணா மாளவில்லை என்று வெங்கண்ணா வாழ்ந்தான்!

பாரத புத்திரர்களின் ஆட்சியில், அந்தஸ்து, என்ற பெயரால் வீண் ஆடம்பரங்களுக்காகக் கொட்டி அழுகின்ற பணம் கோடிக்கணக்கான ரூபாய்களாகும்! ஏன் இந்த வீண் செலவுகள் என்று நல்லிதயம் படைத்தோர் தட்டிக்கேட்ட வண்ணமிருக்கின்றனர். "ஏழை நாட்டின்" பணத்தை இப்படி எதற்கும் பயனற்ற பணிகளில் நாசமாக்காதீர்கள் என்ற குரல் நாட்டின் நாலு பாகங்களிலிருந்தும் எழுந்த வண்ணமுள்ளது. ஆனால் ஆட்சிபீடத்தில் இருப்போர் அது பற்றியெல்லாம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை! அண்மையில் நடைபெற்ற 'சாகர்தர்சன்" பற்றி இன்று நாடே சிரித்துக்கொண்டிருக்கிறது! என்றாலும் அந்த வீண் செலவுகளின் எந்தப் பகுதியையும் அவர்கள் குறைத்துக்கொண்டதாகத் தெரியவில்லை! அதன் ஒரு பகுதிதான் இந்த "இளைஞர் விழாவும்!"

நாட்டிலே ஒருபக்கம் பஞ்சமும் பட்டினியும், தலைவிரித்தாடுகிறது. வேலையில்லாக் கொடுமை நாளுக்கு நாள் வளர்பிறையாகிக்கொண்டு வருகிறது. அரும்பெரும் திட்டங்கள பல பணமுடையினால் நிறைவேற்றப்பட முடியாமல் தூங்கிக்கிடக்கின்றன. இந்திய அரசினர் உலகெங்குமுள்ள நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்டுவரும் கடன் தொகை நாள்தோறும் மலையென வளர்ந்து வருகிறது. எதிர்காலச் சந்ததியினர் அந்தக் கடனை அடைக்க, என்னென்ன தொல்லைகளுக்கு ஆளாகித் துன்புறுவார்களோ என்று நல்லிதயம் படைத்தோர் - நாட்டின் எதிர்காலத்தில் அக்கறைகொண்டோர், கவலைப்பட்ட வண்ணமுள்ளனர். நம் நாட்டுமக்கள் செய்த பெருந்தவறினால் நம்மை ஆளும் பொறுப்பில் அமர்ந்துகொண்டோர், தாம் பெற்ற வாக்கு ஒன்றை மட்டும் காட்டி நம்வாயை அடக்கிவிடுகின்றனர்! எதைப் பற்றியும் கிஞ்சித்தும் கவலைப்படாமல், தங்கள் சுகபோக வாழ்விற்கும், தங்கள் அரசினரின் புகழை உலக அரங்கிற் பறைசாற்றுவதற்கும், இந்த நாட்டு ஏழையரைப் பிழிந்து சேர்க்கும் வரிப் பணத்தைப் பாழாக்கி வருகிறார்கள்!

மைசூரில் இளைஞர் விழா! ஆண்டுதோறும் அது டில்லியில் நடக்கும்; இந்த ஆண்டு அது மைசூரில் என்றார்கள். அகில இந்தியாவிலிருந்து கல்லூரி மாணவர்கள் ஆயிரக்கணக்கிலே அந்த விழாவிலே பங்கு பெறுவர் என்றும் சொல்லினர். தேவையற்ற ஒன்று இது; செய்து தொலைத்தனர். காலத்தையாவது ஒழுங்காகத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடாதா? கல்லூரி விடுமுறை நாட்களில் இந்த விழாவை வைத்திருந்தால் இன்று கருநாடகம், கண்ணீர் வடித்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை பிறந்திருக்காது. வாலிபர்கள் உள்ளத்தில் - அதுவும் கல்லூரி வாழ்வில், இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஆசை எழுவது இயற்கை. கல்லூரி முதல்வர்களை வேண்டினர் விடுமுறை தரக் கோரி; அவர்களோ கல்வி அமைச்சர் பக்கம் கைகளைக் காட்டினர். மாணவர்கள் கூட்டமொன்று அமைச்சரைக் காணச் சட்டமன்றம் நோக்கிப் புறப்பட்டது. முறைப்படிப் பார்வையாளர்கள் அறைக்கு மாணவப் பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட்டனர். அங்கு நடந்ததென்ன? அது நீதியின் முன்னுள்ள பிரச்னை. "ஓ"வென்ற ஓர் அலறலுடன் மாணவர்கள் வெளியே வந்தனர்! வெளியே காத்துக் கிடந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் உள்ளங்கள் தீப்பிழம்பாயின. அதன்விளைவு? இரண்டாவது கலிஃபோர்னியோவாக பெங்களூர் அன்று இருளில் மூழ்கிக் கிடந்தது! திராவிட நாகரிகத்தின் அழியாச் சின்னம்-மாற்றாரும் கண்டு பொறாமைப்படும் சட்டமன்றக் கட்டிடம் "விதான சௌதா", அன்று செந்நீரால் கழுவப்பட்டது! மாணவர்கள் மீது போலீசார் நடத்திய போராட்டம், அந்தக் கலை மாளிகையில் களங்க முத்திரை பதியச் செய்துவிட்டது. ஒரு நாளோடு அது முடிந்துவிடவில்லை-இரண்டாம் நாள்-மூன்றாம் நாள் என்று நீடித்தது.

டிசம்பர் 8-ம் நாள் துவங்கிய அந்தப் போராட்டம், மைசூரிலும், பெங்களூரிலும், பொது அமைதியைப் பெரிதும் பாதித்தது. மைசூரில் போலீசார் 5 ரவுண்டுகள் சுட்டனர்; பெங்களூரில் 4 ரவுண்டுகள் சுட்டனர். ஏராளமான கண்ணீர்ப் புகைக் குண்டுகள் காலியாக்கப்பட்டன. இரு இடங்களிலும் தடியடியின் கொடுமைக்கு ஆளானோர் கணக்கிலடங்கார். வீதியில் போவோர்-வேடிக்கை பார்ப்போர் அத்தனை பேரும் அநியாயமாகத் தாக்கப்பட்டனர். அந்தக் கிளர்ச்சியின் விளைவாக நகர பஸ்கள் தாக்கப்பட்டன. சுமார் 40 ஆயிர ரூபாய்ப் பொருள்கள் நாசமடைந்திருப்பதாக அதன் நிர்வாகிகள் அறிவிக்கின்றனர். சுமார் 15 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய தெரு விளக்குகள் உடைத்தெறியப்பட்டன. அதுமட்டுமல்லாமல், வேல் கொண்டு விலாவிலே குத்துவது போன்ற வேதனையான நிகழ்ச்சி பொன்றும் நடந்திருக்கிறது. பொறியியற் கல்லூரி மாணவன் ஒருவன், "தும்கூரி"லிருந்து பெங்களூர் வந்து கல்வி பயின்றுகொண்டிருப்பவன்; மூன்றாண்டுகள் படிப்பை முடித்துக்கொண்டிருப்பவன்; இன்னும் ஓராண்டே பாக்கி; அதனையும் முடித்துவிட்டு, பொறியியல் நிபுணனாக நாட்டுக்குப் பணியாற்றத் துடித்துக்கொண்டிருப்பவன்! அவன் தங்கியிருந்த விடுதி அறையில் பாடநூல்களுக்கிடையே மூழ்கிக் கிடந்தான்! திடீர் என்று போலீசுப் படை ஒன்றுஅந்த விடுதி மீது படையெடுத்தது. அடைத்துக் கிடந்த கதவுகள் பல உடைக்கப்பட்டனவாம். தடியடிப்பிரயோகமும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சும்விடுதிக்குள்ளேயே நடைபெற்றனவாம். மாணவர்கள் பலர் சிதறி ஓடினர். "கங்கண்ணா" என்ற அந்தப் பொறியியல் மாணவன் ஒருவன் விடுதி மாடியிலிருந்து கீழே விழுந்தான். போலீசாரால் அடித்து கீழே தள்ளப்பட்டதாக மாணவர்களும் - பயந்து ஓடுகின்றபோது கீழே விழுந்ததாகப் போலீசாரும் கூறுகின்றனர். உண்மை எது என்று புலன் விசாரணையில் தெரிந்தாகவேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள 'வழக்கறிஞர்கள் சங்க"த்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எது எப்படியிருப்பினும், கீழே விழுந்த மாணவன் இந்த உலகத்தினின்றும் விடை பெற்றுக்கொண்டான். மூன்று திங்களுக்கு முன்னர்தான் அந்த கட்டிளம் காளைக்குத் திருமணமாயிற்றாம். என்னென்ன எதிர்கால இன்பங்களைப் பற்றி அவன் எண்ணிக் கிடந்தானோ? அவனது இன்பக் கனவுகள் எல்லாம் இப்படிக் கானல் நீராக மாறிவிடுமென்று அவன் அந்தக் கணம் வரையில் உறுதியாக எண்ணியிருக்கமாட்டான். அவனைப் பெற்று வளர்த்துப் பொறியியற் கல்லூரி வரையில் அனுப்புவதற்கு அவன் பெற்றோர்கள் என்ன பாடு பட்டனரோ? மகனை மண்ணுக்கு இரையாக்கிவிட்டு, அவன் கல்லறையில் கண்ணீர் சிந்தி நிற்கும் அந்த முதியவர்களுக்கு ஆறுதல் கூறுவார் யார்?

"பாழும் இளைஞர் விழாவே! நான் பாடுபட்டுப் பெற்று, பாலூட்டி வளர்த்த என் பாலகனைக் கொன்றுவிட்டாயே! ஏ, இரக்கமற்ற ஆட்சிபீடமே! உன் கோரப்பற்களுக்குப் பலியாக்கவா என் மகனைக் கண்ணின் மணிபோல் காத்து வளர்த்தேன்? நீ வாழ்வாயா? உன் ஆட்சி நிலைக்குமா?" என்று அந்தத் தாய் கத்தியிருப்பாளே! அந்தத் துன்பத்தீ இந்த ஆடம்பரப்பிரியர்களின் ஆட்சியைச் சுட்டுச் சாம்பலாக்காமலா போய்விடும்? காலமே! நீ பதில் கூறு.

அந்த நாளில் வெங்கண்ணா வெளிநாட்டாரிடம் இம்மண்ணின் மக்களைக் காட்டிக் கொடுத்தானாம், தன் வாழ்வை வளமாக்கிக்கொள்ள. அவன் பின் இறந்துவிட்டான் என்றே எண்ணினோம். இல்லை; அவன் மாளவில்லை; இன்னும் வாழ்ந்திருக்கிறான் காங்கிரசார் உருவில். கங்கண்ணாவின் இள ரத்தத்தை "தில்லி மைனர்க"ளின் கோலாகல விழாவுக்குத் தெளிக்கும் திருப்பணியை முடிப்பதற்காக, அவன் மைசூர்க் காங்கிரசார் உருவில் வாழ்ந்திருக்கிறான் அவலம் இது ஒழிய வேண்டுமெனில், காட்டிக் கொடுக்கும் வெங்கண்ணாக்கள் ஒழிய வேண்டும்; ஒழிந்தே தீர வேண்டும்.

—கி. சோழன்.




(1)

**கை**யில் குழந்தையுடன் ஒருத்தி ஆற்றை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

தூரத்திலிருந்து ஒரு குரல் கேட்டது:

"நில் !

குழந்தையைக் கொல்வதும் தற்கொலை செய்து கொள்வதும் சட்ட விரோதம் தெரியுமா ?"

அவள் நின்று திரும்பினாள்:

"சட்டமா ? என்ன அது ? எங்கிருக்கிறது ?"

"உன்னைத் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது; குழந்தையைக் கொன்றாலும், நீ தற்கொலை செய்துகொள்ள முயன்றாலும், அது உன்னைப் பிடித்துவிடும் !"

"நான் பெற்ற குழந்தையை நான் கொல்கிறேன். சட்டம் யார் என்னைத் தடுப்பதற்கு ?"

"பெறுவது உன் பொறுப்பு. அதைக் கொல்லாமல் காப்பது சட்டத்தின் பொறுப்பு."

"எங்களுக்குப் பசி எடுப்பது யார் பொறுப்பு ?"

"இயற்கையின் பொறுப்பு !"

"அந்தப் பசியைத் தீர்க்க வேண்டியது யார் பொறுப்பு !"

"அரசாங்கத்தின் பொறுப்பு !"

"பசி தாங்காமல் நாங்கள் சாக முயன்றால் சட்டம் தண்டிக்க வேண்டியது, யாரை ? எங்களையா ? அரசாங்கத்தையா ?"

"உங்களைத்தான் !"

"காரணமானவர்களை விட்டுவிட்டு, காரியம் செய்பவர்களைத் தண்டிப்பதுதான் சட்டமா ?"

"சட்டத்திற்குக் காரணத்தைப்பற்றிக் கவலையில்லை. ஏன் நடந்தது என்பதைப்பற்றி அது சிந்திப்பதில்லை. எப்படி நடந்தது என்பதையே அது ஆராய்கிறது !"

"முட்டாள்தனமான சட்டம். ஒவ்வொரு குற்றமும் ஒவ்வொரு காரணத்தோடுதான் செய்யப்படுகிறது. அந்தக் காரணங்களிற் சிலவற்றிற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் தப்பிவிடுகிறார்கள். காரியம் செய்வோர்மட்டும் பிடிபடுகிறார்கள்."

"சட்டத்தில் ஓட்டைகள் இருக்கலாம். ஆனால் இருக்கின்ற சட்டம் உன் செயலைக் குற்றம் என்கின்றது."

"ஓட்டை உடைசல்களுக்கெல்லாம் நான் கட்டுப்படவேண்டிய அவசியம் என்ன ? சோறு போட வக்கில்லாத சட்டத்திற்கு, உயிர்களின்மீது மட்டும் இரக்கம் எங்கிருந்து வந்தது ? போய் உங்கள் சட்டத்திற்குச் சொல்லுங்கள்: 'பசி தாங்காமல் சிலர் தற்கொலைக்கு முயன்றால், தண்டிக்கப்பட வேண்டியவர் உணவுமந்திரி. வேலை கிடைக்காதவர்கள் தற்கொலைக்கு முயன்றால், தண்டிக்கப்படவேண்டியவர் உள்நாட்டு மந்திரி. விவசாயி கடன்காரனானால், தண்டிக்கப்பட வேண்டியவர் விவசாய மந்திரி. விலைவாசி ஏற்றத்தால் வாழமுடியாதவர்கள் சாக முயன்றால், தண்டிக்கப்பட வேண்டியவர் முதல்மந்திரி. ஆள்பவர்கள் குற்றங்களை உற்பத்தி செய்கிறார்கள். வாழமுடியாதவர்கள் குற்றங்களுக்கு ஆட்படுகிறார்கள். சட்டத்தின் இருண்ட கரங்கள், பாம்புகளை விட்டு விட்டுத் தவளைகளைக் கொல்கின்றன. எங்கள் துயரங்களைத் தீர்க்க யோக்கியதையில்லாதவர்கள், எங்கள் உயிர்களை ஏன் தொடர்ந்துவருகிறீர்கள் ? நாங்கள் தற்கொலை செய்துகொள்வது குற்றமென்று சொல்வதைவிட, ஆட்சியிலிருப்பவர்கள் தற்கொலை செய்துகொள்ளாமல் இருப்பது குற்றமென்று உங்கள் சட்டத்திற்குக் கூறுங்கள். பசியால் துடித்துத் துடித்து இயற்கையாகவே மாண்டுபோனால், அது உங்கள் சட்டத்திற்குச் சம்மதமே. அவ்வளவு நாள் துடிப்பானேன் என்று ஒரு நாளில் சாக முயன்றால், அது மட்டும் விரோதமா ?

வாழ்க்கையில் துயரத்தைக் காணாதவர்கள்சட்டத்தைப் படைத்தார்கள். அந்த முதலாளித்துவத்திற்கு நாங்கள் ஏன் ஆட்பட வேண்டும். பத்துக் கோடிப் பேர்களின் உள்ளங்களைக் கேட்டறிந்த பிறகா, பத்துப் பேர் சட்டங்களைப் படைத்தார்கள் ? வரண்டு போன வயலில் மழை பொழியும் படி உங்கள் சட்டம் மேகத்திற்கு ஆணையிடுமா ? தண்ணீரில்லா ஆறுகளில் தண்ணீர் வரும்படி உங்கள் சட்டம் ஓர் உத்தரவு போடுமா ? ஆடையில்லாத ஏழைகளுக்கு உங்கள் சட்டம் தன் கைகளால் ஆடையுடுத்திவிடுமா ? சோர்ந்து போன உள்ளங்களை, தடவிக் கொடுத்துப் பலப்படுத்தும் சக்தி உங்கள் சட்டத்திற்கு உண்டா ? அழுகையில் வரும் கண்ணீரை ஓர் அரை மணி நேரம் நிறுத்தி வைக்கும் ஆற்றல் பெற்றதுண்டா, உங்கள் சட்டம் ? விளைவிக்க யோக்கியதை இல்லாதவர்கள், அறுவடையை ஏன் தடுக்க வருகிறீர்கள் ? தருமம் புதைக்கப்பட்ட இடத்தில் உங்கள் சட்டம் உற்பத்தியாயிருக்கிறது. அதனால்தான் தருமத்தின் சாயல்கூட இல்லாமல் அது வளர்ந்திருக்கிறது. பழுதுபட்டுப் போன கோட்டையில் உங்கள் சட்டம் விழுதுவிட்டு வளர்ந்திருக்கிறது. குற்றவாளிகளைத் தண்டிப்பதுதான் சட்டமென்று நீங்கள் சொல்கிறீர்களா ? நீங்கள் அறியாதவர்களே ! எத்தனை குற்றவாளிகள் தப்பியிருக்கிறார்களென்று உங்களுக்குத் தெரியுமா ? எத்தனை நிரபராதிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையாவது நீங்கள் அறிவீர்களா ? சட்டம் நியாயத்துக்காகப் போராடவில்லை என்பதும், அது சாட்சிகளோடுதான் மாரடித்துக்கொண்டிருக்கிறது என்பதும் உங்கள் புத்திக்கெட்டவில்லையா ? வக்கீல்களுடைய திறமை நீதிபதிகளை முட்டாள்களாக்குவதை நீங்கள் காணவில்லையா ? 'எனக்கு இவன் குற்றவாளி என்று தெரிகிறது; போதுமான சாட்சிகள் இல்லாததால் விடுதலை செய்கிறேன் !' என்றொரு நீதிபதி சொன்னதை நீங்கள் படிக்கவில்லையா ?

சட்டவிளக்கை ஏற்றி வைத்தவர்களுக்கு நல்லெண்ணம் இருந்திருக்கலாம். அந்த விளக்கை, சாட்சிக் குடத்துக்குள் அடைத்து வைத்து, சதிராட்டம் ஆடுகிறது உலகம். கட்டுப்பாடானதும் முழுக்க முழுக்க உண்மையையே கண்டுபிடிப்பதுமான ஒரு சட்டம் உருவாக்கப்படுகிற வரையில் இன்றையச் சட்டத்தில் எங்களுக்கு உடன்பாடில்லை. பணம் படைத்தவர்கள் நீதியை விலை வாங்குகிறார்கள். ஏழைகளைச் சட்டம் பழி வாங்குகிறது. காக்கும் அரசாங்கம் பழுதுபட்டுப் போனது. அது கைக்கொண்ட சட்டம் பலமான சாட்சியங்களைக் கேட்கிறது. சாட்சி இல்லாத நிரபராதி குற்றவாளி; சாட்சியம் படைத்த குற்றவாளி நிரபராதி. பொய்யும் பணமும் உங்கள் சட்டத்தின் இரண்டு கண்கள். நாங்கள் தருமத்தைத் தேடிக்கொண்டிருந்தபோது நீங்கள் சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள். தருமம் செத்துக்கிடந்தது; சட்டம் எங்களைக் கைவிட்டது. வக்கீல் என்று ஒரு சாதி சட்டத்தின் ஓட்டைகளுக்குள்ளே புகுந்துகொண்டு விளையாடுகிறது.

இருதயத்து உண்மை ஒளியைக் கண்டுபிடித்து, நீதி வழங்கும் தன்மை நீதிபதிகளுக்கேற்படுகிற வரையில் இந்தச் சட்டம் அவர்களையும் ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கும். வக்கீல்கள் என்று ஒரு ஜாதி இருக்கும் வரையில் சட்டம் தானே குற்றம் புரிந்துகொண்டுதான் இருக்கும்."

"என்னதான் நீங்கள் சொல்கிறீர்கள் ?"

"அரசாங்கம் ஒரு குற்றவாளி; சட்டம் ஒரு குற்றவாளி; வக்கீல்கள் குற்றவாளிகள். இதில் எந்தக் குற்றவாளிக்கு எங்களைக் குற்றம் சாட்ட உரிமையிருக்கிறது. நாங்கள் வந்தோம்; நாங்கள் போகிறோம். சொந்தப் பொறுப்பில் வந்தவர்கள் சொந்தப் பொறுப்பில் போய்விட்டார்கள் என்று மட்டும் உங்கள் சட்டத்திற்குச் சொல்லுங்கள்.

அவள் நடந்தாள்: மறைந்தாள். இயற்கையின் சட்டப்படி ஓடிக்கொண்டிருந்த நதி, அவளையும் அவள் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சென்றது.

(அடுத்த இதழில்: சட்டம்-2)



"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"


# எண்ணம்

மலர் 6 | 26-12-'59 | இதழ் 28


## கூடிக் கலைந்தோரே! தனியே ஆடி மகிழ்ந்தோரே!

சிந்தனைக் கடலின் செந்தேன் துளிகள், எழுத்துக்கள்!

தேன் துளிகளைச் சேர்த்துத் தரும் ஈக்கள் எழுத்தாளர்கள்!

அவர்கள் காலத்தின் கண்ணாடிகள்; நாட்டு நிலையின் எதிரொலிகள்!

வதைந்து கெட்டாலும், வறுமையால் அழிந்து உழன்றாலும் அவர்கள் கொண்ட கொள்கையை—எழுதிய எழுத்தைக் கட்டிக் காப்பார்கள்; அரசினரின் ஆணைக்கோ, பணத்தின மிரட்டலுக்கோ அவர்கள் பணிந்ததுமில்லை; வளைந்ததுமில்லை!

இத்துணைச் சிறப்பு நலன்களுக்கும் இருப்பிடமான பொன்னான பணியினர் என்றே எழுத்தாளர் பேசப்படுகின்றனர்.

இந்தச் சமுதாயம் வெள்ளையன் ஆட்சியால் இருண்டு கிடந்தபோதும், அதற்கு முந்திய நூற்றாண்டுகளில் ஓயாத போர்களால் நாடு குலைந்து கிடந்தபோதும், உருவான எண்ணங்களைத் தொகுக்கமுடியாதிருந்தது. சிந்தனையாளர்களின் நெஞ்சத்தெழுந்த தீஞ்சுவைக் கருத்துக்கள் அவர்கள் நெஞ்சுக்குள்ளேயே புதையுண்டுவிட்டன. இதில் கருத்து மாறுபாடு இல்லை, எவ்வகை எழுத்தாளர்க்கும்.

இந்தத் துணைக்கண்டத்தில் மட்டுமில்லை; உலகின் பல பகுதிகளிலும் கருத்து உரிமைக்காக மக்கள் அவ்வப்போது போராடியிருக்கின்றனர். அண்மையில் உருசிய மண்ணில் பாஸ்டர்நாக் பட்ட பாட்டையறிந்த சிந்தனையாளர்களெல்லாம் அதனைக் கண்டித்திருக்கின்றனர். போரின் வெறிக் கூத்து உச்சநிலையில் இருந்தபோது, சிந்தனையின் தூதுவர்கள் பலர் செர்மனியிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் வெளியேற வேண்டிய அவலநிலை தோன்றியது. இந்தியத் துணைக்கண்ட விடுதலைப் போரின்போது "எரிமலை"களும் மூடி மறைக்கப்பட்டன. வங்கச் சிங்கம் இளைஞர்களுக்குத் தந்த எழுத்துக்களும் மறைக்கப்பட்டன. கத்தியின்றி, குருதியின்றி அறப்போர் செய்ய அழைத்த நாமக்கல்லாரின் குரலையும் மறைக்க முனைந்தன, வெறிக் கைகள். அவற்றை எல்லாம் எடுத்துக் காட்டும் ஏடுகள் மற்றவற்றை எழுத மறந்துவிட்டன.

எழுத்து சிந்தனையை வெளியிடும் நல்ல கருவியாதலால், அது விடுதலைப் போராட்டத்திற்கு வரையறையில்லாத அளவு வேண்டப்படுகிறது. பொழுதுபோக்குக்கான நூல்களைமட்டுமில்லை; அரசியலில், கலைப் பண்பில், மொழியியலில் சரிந்து கிடக்கும் மக்களை உய்விக்கும் நூல்களையும் பேரளவு தர வேண்டியது எழுத்தாளனின் கடப்பாடாகிறது.

பாஸ்டரின் சிந்தனைச் சுதந்தரத்திற்குத் துணை நின்றோர், விநாயக தாமோதர சாவர்க்காரின் அரசியல் உரிமைச் சிந்தனைக்கும் துணை நின்றனர். கண்ணுக்குத் தெரியாத தொலையில் இருந்தோரின் இலக்கியச் சுதந்திரத்திற்குத் துணை நின்றோர், கண்ணெதிரே உலவிய வங்கச் சிங்கத்தின் முழக்கத்திற்கும் துணை நின்றனர்.

உலகோர் அனைவருக்கும் ஒப்ப உதவும் குறளோடு, தன் நாட்டு எல்லை காக்கும் முறையில் வஞ்சினம் கூறிய பாண்டியன் பாடலும் நம் நினைவில் நிற்கிறது. சரோசினிதேவியின் பல்லக்குத் தூக்கிகளைப்போலவே, பாரதியாரின் முரசுப் பாட்டும் மக்கள் கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

இவை எல்லாம் இலக்கியச் சிந்தனைகளுக்கு, அவை எவ்வகையில் எழுந்தாலும் மதிப்புண்டு என்பதைக் காட்டுகின்றன. அழகின் வருணனையைப்போன்றே, அரசியல் புரட்சிகளுக்கான வார்த்தை வடிவங்களும் மக்கள் கருத்தைக் கவர்ந்திருக்கின்றன. அத்தோடு இயற்கையை—உறவை—எழிலைக் கண்டபோது உணர்வை வெளிப்படுத்த எந்த அளவு சொற்களை ஆள்கின்றோமோ, அதே அளவு அரசியல் வேட்கையை வெளிப்படுத்த சொற்களைப் புனைவது தவறில்லை என்பதும் பெறப்படுகிறது. எனினும் இந்தியத் துணைக்கண்ட எழுத்தாளர் மாநாடுபற்றி எழுத வந்த ஓரிரு "அவாள்" ஏடுகள், இடையே நமது அரசியல் வேட்கைகளை, பிரிவினைப் பிதற்றல் என்றும் பிரதேசப் பித்து என்றும் பழித்துள்ளன. அவற்றிற்கு ஓரளவு விளக்கம் தரவே இதனை எழுதுகிறோம். "நம் வாழ்வுக்கு, தனித்த திராவிடமே மருந்து; உயிர்நிலை!"—இப்படி எண்ணுவோர் இக்கருத்தை வலியுறுத்த எழுதுவது தவறில்லை. தம் அரசியல் கருத்தைப் பரப்ப அன்னார் எழுதுவது தவறு என்றால், சத்தியமூர்த்தியும் சாவர்க்காரும், கல்கியும் காந்தியாரும், நாமக்கல்லாரும் செயப்பிரகாசு நாராயணனும் அரசியற் சிந்தனைகளை வார்த்தைகளில் வடித்தெடுத்ததும் தவறே!


இதனை, சில ஏடுகளின் ஆசிரியர்கள் உணராததுபோன்றே, அனைத்து இந்திய எழுத்தாளர் மாநாட்டினரும் உணரவில்லை. இதனாலேயே வேறு பல அரசியற் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு அழைப்பிதழ்களை அனுப்பிய அவர்கள், திராவிட இயக்கத்தவர்க்கு அழைப்பு அனுப்பவில்லை. வரவேற்புக் குழு அமைக்கும்போதே, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் அவரின் கீழ் இயங்கும் செயற்குழுவும் புறக்கணிக்கப்பட்டதை அறிவோம். கல்கத்தாவுக்கு அடுத்து சென்னையில் இவ்வனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டை நடத்துவது என்று இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, சென்னையிலிருந்து தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்ற பிரதிநிதி ஒப்புக்கொண்டு வந்திருக்கிறார். நீண்ட இடைவெளிக்குப்பின், பலரின் முயற்சிகளுக்குப் பின் இம்மாநாடு நடந்திருக்கிறது. ஆகவே வரவேற்புக்குழுவை எப்படி அமைப்பது என்று எழுத்தாளர்களைக் கூட்டிக் கலந்து முடிவு செய்ய மிகுந்த காலமிருந்தும், ஏனோ தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர்க்குரிய பங்கு மறுக்கப்பட்டிருக்கிறது? ஏனோ ஒன்றும் எழுதியறியாத அரசுத்தரப்பினர் ஒருவருக்குத் தரப்பட்டிருக்கிறது, தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவருக்குத் தரப்பட வேண்டிய பதவி? ஊருக்கு அறிவுரைக்க வருவோர், திரண்டெழுந்த ஆற்றலை ஒதுக்கி விட்டுத் தனிவழியே செல்லும் இந்த வரவேற்புக் குழுவினர்க்குத் தந்த அறிவுரைகளென்ன?

எழுத்தாளர் மாநாடு கூடிக் கலைந்துவிட்டது. செக்கோசுலோவேக்கியா, காசுமீர் போன்ற உலகின் பலபகுதி எழுத்தாளத் தோழர்களும் வந்திருந்து வரவேற்புக்குழுவினர் ஏற்பாடு செய்திருந்த கலை விருந்துகளையும் சுவைத்துவிட்டு ஊருக்குத் திரும்பிவிட்டனர். ஆனால் இனிமேல் தான், மாநாட்டின் வெற்றி தோல்வியைக் கணக்கிடும் வேலையில் மூழ்கியுள்ள வரவேற்புக்குழுவினரின் மூளைக்கு வேலை காத்திருக்கிறது. அண்மையில் தமிழக எழுத்தாளர் சிந்தனைகள் அன்னாருள் வேறுபல வேறுபாடுகளிருப்பினும் ஒரு வகையில் ஒன்றாய் ஆர்த்தெழுந்திருப்பதை அக்குழுவினர் அறியட்டும். எழுத்தாளர் ஒற்றுமையைக் குலைக்க முயன்றோர் — எழுத்துலகின் ஐக்கியத்தைத் தமது தனிநலத்திற்காக்கிக் கொள்ள எண்ணியோ, இனி தோல்வியுறுவர் என்பதை அறிவிப்பனவாய் அந்த சக்திகள் ஆர்த்தெழுந்திருக்கின்றன.


மற்றும் அரசியற் சிந்தனைக்கு வார்த்தை வடிவம் தருவதும் தவறில்லை என அக்குழுவினர் அறியும் வாய்ப்பும் ஏற்பட்டிருக்கும். இனிமேலாகிலும் செயல் எழுத்து அத்தனையிலும் உயிர்ப்பு இருக்கவேண்டுமென்று எண்ணுவோர் எல்லோருடனும் இணைந்து செல்லட்டும்.

கூடிக் கலைந்து விட்டது மாநாடு; இனியாகிலும் ஒழுங்காக எழுதப்படட்டும் எழுத்துலகின் பொன்னேடு! ★

★ விருந்து



ஈழத்து எழுத்தாளரும் ஜெமினி பதிப்பக உரிமையாளரும் ஆன எம். எ. அப்பாஸ் அவர்கள் சென்னை மேயர், துணைமேயருக்கு ஒரு விருந்தளித்தார். படத்தில் தேனாம்பேட்டை டேனியல், துணைமேயர், மேயர், அப்பாஸ் ஆகியோர் உள்ளனர். ★



# மறைந்தனையோ, ஐயா ?

**தா**யின் கருங்குழலை அலங்கரித்து வந்த புது மலர்கள் சரிந்து வீழ்கின்றன!

மலர்ந்து மணம் சிந்தி நாட்கள் பலவானாலும் புத்தெழிலுடன் விளங்கின அவை.

காலத்தின் விளையாட்டுப் புத்தி அவற்றைத் தட்டிவிட்டுக் கருக்குகின்றது.

—இந்த எண்ணமே, வேதனை வடியும் நெஞ்சின் ஓலமாகிறது.

நாவலர் ச. சோ. பாரதியார், நாடு புகழும் நல்லறிஞர்; மொழியின் நலம் பேணக்களம் சென்றார்; பழம் பெருமை பேசுவதில் மகிழாது, புதியன படைத்தார்; கற்றதை விரித்துரைத்து, ஐயம் நீக்கினார். அவர் தமிழன்னையின் குழற் கற்றையை அழகு செய்த புதுமண மலர்! அந்த மலர் கருகிற்று வெந்தழலில் என்ற செய்தியைக் கேட்டு நாடே துடித்தது.

மாண்ட அப்பெரியாரின் அரும்பணிகளை நினைத்து நினைத்து அரற்றியவர்களின் நெஞ்ச மொழிகள், பலப்பல!

அன்று பசுமலையில் நாவலரின் இல்லத்தில் மொத்த வருத்தமும் கூடியிருந்தது. "தனி ஒரு மனிதனது துன்பமில்லை அவரது பிரிவு; ஒரு சமுதாயத்தின் பேரிழப்பு அவரது பிரிவு' என்பதை அக்காட்சி சொல்லாமற் சொல்லியது.

மாண்டும் ஒளி குன்றாதிருந்தது அவரது எழில் உடல்.

சரிகைத் துண்டுகளால் மூடப்பட்ட கணக்காயர், நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியாரின் உடல், பசுமலையில் உள்ள அவரது இல்லத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இரு குத்துவிளக்குகள் எரிந்து கொண்டே இருந்தன. பாரதியாரின் இரு குமாரர்களான திரு. இராசராம் பாரதியும், திரு. லெட்சுமிரதன் பாரதியும் நேற்று இரவு வெளியூரிலிருந்து இங்குவந்து சேர்ந்தனர்.

பாரதியார் காலமானது பற்றிய தந்திச்செய்தி கிடைத்தவுடன், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் திருச்சியிலிருந்து தூத்துக்குடி விரைவு இரயிலில் மதுரை வந்து சேர்ந்தார். மற்றும் அவரது மாணவர் பலர் மதுரையினின்றும் தமிழகத்தின் பல பகுதிகளின்றும் வந்திருந்தனர்.

பாரதியாரின் மனைவியாரும், அவருடைய மூன்று குமாரத்திகளான திருமதிகள் இலட்சுமி கிருட்ணசாமி பாரதி, லலிதா காமேசுவரன், மீனாட்சி ஆகியோர் பாரதியாரின் உடல் அருகிலேயே இருந்தனர்.

எட்டையபுரத்தில் பிறந்து சென்னையிலும் அண்ணாமலை நகரிலும் தூத்துக்குடியிலும் இன்னும் தமிழகமெங்கும் ஆடி ஓடி அலைந்து பணியாற்றித் தமிழர் நெஞ்சில் இடம் கொண்ட அப்பெரியாரின பொன்னுடலை, பசுமலைச் சுடுகாடு கொண்டது. பல்லாயிரவர் சோக இருள் கப்பிய நெஞ்சுடனே நிற்க, தூயோனின் உடலுக்கு - தொண்டனின் நெஞ்சுக்கு எரியூட்டப்பட்டது.

பாரதியாரின் மூத்த குமாரர் திரு. இராசராம் பாரதி முதலில் டாக்டர் பாரதியாரின் உடலுக்குத் தீ மூட்டினார்.

'தமிழ் வாழ்க' என்று மக்கள் மூன்று முறை முழங்க, அதற்கிடையே கணக்காயர் நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியாரின் உடலுக்குத் தீ மூட்டப்பட்டது.

பொன் உடல் எரியும் வேளையில், பேதை நெஞ்சம் எரிய, இரங்கற்கூட்டம் நடத்தினர் துக்கம் நெஞ்சை அடைக்க, சோகம் இதழைக் கொத்த, துன்பம் இதயத்தைக் கிழிக்க, தொண்டர் பலர் தம் கண்ணீரை உகுத்தனர். கண்ணீர் மழையாகப் பெய்தும், சொல்லருவி தடைப்பட்டுவிட்டது. அங்கே அவரின் நெறி நின்றோரும் அவரது வழிச் சென்றோருமான பலர், சிந்திய கண்ணீர்த்துளிகளை ஈண்டு தொகுத்துத் தருகிறேன்:

### திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்:

"தமிழ் மக்களுக்கும், தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும் பல்லாண்டு பாடுபட்ட பெரியாரின் உடல் இன்று நம்மை விட்டுப் பிரிந்தது.

நான்கு கோடித் தமிழ்மக்களின் சார்பிலும், தமிழகப் புலவர் குழுச் சார்பிலும் தமிழ்ப் பெருமக்களின் தொண்டன் என்ற முறையிலும் டாக்டர் பாரதியாருக்கு நான் எனது அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

வாழ்க்கையில் பாரதியார் பெரிய செல்வந்தராகவும், நில உரிமையாளராகவும், கல்வி வல்லுநராகவும், நாவலர் கணக்காயராகவும், வீரராகவும் விளங்கினார். எல்லாவிதப் பண்புகளும் அவரிடம் குடிகொண்டிருந்தன. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்காக டாக்டர் பாரதியார் அயராது பாடுபட்டார்; தமிழுக்காக அல்லும், பகலும் உழைத்த ஒரு பெரியாரை மட்டும் இன்று நாம் எரிக்கவில்லை; தமிழை எரிக்கிறோம்; தொல்காப்பியத்தையே எரிக்கிறோம்.

தமிழ் மக்களின் முதுபெரும் தமிழறிஞர் கணக்காயர், நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் தமிழ்மொழிக்குத் தொண்டாற்றுவதன் மூலம் தொல்காப்பியமாகத் திகழ்ந்தார். அந்தத் தொல்காப்பியத்தையே இன்று எரிக்கிறோம்.

பாழ்பட்ட தமிழகத்தின் நிலையைப் போக்க பாரதியார் தம்முடைய கல்வி, ஆற்றல், அறிவு முதலியவற்றைப் பயன்படுத்தினார். உயிருடன் இருக்கும் பேரறிஞர்களை என்றுமே போற்றியறியாத தமிழ் மக்களிடம் இவ்வளவு காலம் பாரதியார் பணியாற்றினார்.

தமிழ் மொழியின் உயர் தனிச் செம்மையையும் இனிமையையும் தொன்மையையும் தமிழகத்தில் பரவச் செய்த பண்டிதமணி கதிரேசர், திரு. வி. கல்யாணசுந்தரனார், வேங்கடசாமி நாட்டார், உமாமகேசுவரர் போன்ற 10-க்கு மேற்பட்ட முதுபெரும் தமிழறிஞர்கள் வரிசையில் டாக்டர் சோமசுந்தர பாரதியார் நான்காவது இடத்தில் இருந்தார்.

தமிழ் மக்களின் பாதுகாவலனாகவும், தமிழ் மொழி வளர்ச்சியில் ஆர்வமிக்கவராகவும் திகழ்ந்த பாரதியாரை இன்று எரிக்கிறோம்.

நாட்டிற்கு ஒரு தலைவராக இருக்கலாம். ஆனால் தமிழ் மொழிக்குத் தலைவராக முடியாது என்று மகாத்மா காந்திக்கும், சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்தாலும் தமிழ் மொழியை அழிக்க நீங்கள் யார் என்று இராசகோபாலாச்சாரியாருக்கும் துணிவுடன் அஞ்சல் எழுதியவர் டாக்டர் பாரதியார். அப்படிப்பட்ட பெரியாரை, தமிழர்களின் தொல்காப்பியத்தை எரிக்கிறோம்.

"நான் பாரதியாரின் வழியில் நிற்பேன். அவர் விட்டுச் சென்ற பணியை உறுதியோடு செய்து முடிப்பேன் என்ற உறுதிமொழியைத் தமிழ் மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் மறைந்த மாவீரருக்கு நாம் அளிக்கும் நன்றியாகும். டாக்டர் பாரதியார் தமிழகத்தை விட்டே விலகிச் சென்றுவிட்டார். அது நான்கு கோடித் தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்"

### திரு. ஔவை. சு. துரைசாமி :

"தமிழுக்கும், தமிழருக்கும் பெரும் காவலராக இருந்த பாரதியாரை இழக்கிறோம். அவருடைய மறைவால், கவலை தொண்டையை அடைக்க நாத்தடுமாறுகிறது. உலக மக்கள் முன்பாகத் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கும் பெருமையைப் பாரதியார் அளித்தார்கள். அவர் மறைவு ஈடு செய்ய முடியாததாகும்"

### மதுரை-தியாகராசர் கல்லூரி முதல்வர் திரு. வரதாச்சாரியார் :

"பாரதியார் சிறந்த வழக்குரைஞர். தமிழ் மொழியின்மீது அவருக்குள்ள பற்றுக் காரணமாக நல்ல வருமானமுள்ள வழக்கறிஞர் தொழிலை விட்டார். தம மனதில் உள்ளதை அச்சமின்றிச் சொல்லக்கூடியவர். தமிழ் ஆராய்ச்சியில் தலை நிமிர்ந்து நின்றவர். அப்படிப்பட்ட பெரியாரைத் தமிழ்நாடு இன்று இழந்துவிட்டது. தமிழ் மக்கள் அனைவரும் பாரதியார் வழி நின்று பணியாற்றுவதன் மூலம் அவருக்கு அஞ்சலி செலுத்த வேண்டும்."

### டாக்டர் திரு. துரைஅரங்கனார்

டாக்டர் துரைஅரங்கனார் சென்னைப் பல்கலைக் கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியர் ஆவார். அவர்கள் துக்கம் கப்பிய முகத்துடன் பேசத் தொடங்குகையில் திங்களை இருள் மறைக்க, வானமும் அழுவதுபோல் தோன்றிற்று. அதை இணைத்து அவர்கள் பேசியதாவது :

"பாரதியாரின் மறைவால் திங்களும் தேம்பி அழுகிறது. இயற்கைக்கே ஏக்கம் ஏற்படும் போது தமிழ் மக்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்த பாரதியாரின மறைவால் தமிழ் மக்களின் மனம் குழம்புவது இயற்கையே. பாரதியார் காட்டிய வழிகளையும், பேசிய பேச்சுக்களையும் தமிழர்கள் நன்கு கடைப்பிடித்தால் அவரை நாம் என்றும் மறந்தவர்களாகமாட்டோம்.

எப்பொழுதும் தூய உள்ளம் கொண்டவளைக் கற்புடைய மங்கை எனக் கூறுவதுபோன்று, கற்புடைய மொழியாகத் தமிழ்மொழி தனித் தமிழ் மொழியாக இருக்க வேண்டும் என்று பாரதியார் வலியுறுத்தினார். ஆங்கில மொழியையும், சட்டத்தையும் நன்றாகக் கற்றுணர்ந்த பாரதியார் அதன் மூலம் இதர மொழிகளை ஆய்ந்து, அந்த மொழிகளில் உள்ள கருத்துக்களைத் தூய தமிழ் மொழியில் வெளிப்படுத்தினார். 80 வயது நிரம்பப் பெற்ற டாக்டர் பாரதியார் தம் உடலைப் பேணிய முறை தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டாகும். மற்றவர்களும் அதைப் பின்பற்றினால் நலம்."

### திரு. சி. இலக்குவனார்

நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் பணியாற்றிவிட்டு, இப்போது மதுரை-தியாகராசர் கல்லூரியில் பணியாற்றி வரும் தமிழ்ப் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் குறிப்பிட்டதாவது :

"இருபதாம் நூற்றாண்டு நக்கீரரை நாம் இழந்துவிட்டோம். இனி அவரைக் காணமுடியாது. வீரம் செறிந்த பாரதியாரின் உருவத்தையும் பேச்சு வன்மையையும் நாம் காணமுடியாது. அவருடைய செயலை நிறைவேற்ற ஆயிரமாயிரம் இளைஞர்கள் முன் வர வேண்டும்."

### திரு. எல். கிருட்ணசாமிபாரதி

சிறந்த தமிழ்ப் பேச்சாளரும், அரசியல் நிர்ணய சபை உறுப்பினராய்ப் பணியாற்றியவரும், நாவலரின் மருகருமான இவர், மொழி குழற உரைத்ததாவது :

"விடுதலை இயக்கத்தில் பாரதியார் கொண்டிருந்த பேரார்வம அளவிடமுடியாது. தமிழ் மொழியில் அவருக்கு இருந்த ஆர்வத்தால், வழக்கறிஞர் தொழிலில் உள்ள நல்ல வருமானத்தையும் உதறித் தள்ளினார். இந்தி எதிர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டார். தமிழின் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் என்பதில் சிறந்த ஆர்வமுள்ளவர். இந்தி எதிர்ப்பு தொடர்பாகப் பாரதியார் கூறிய கருத்துக்கள்தான் பின்னால் நிறைவேறியதால், அவர் ஒரு தீர்க்கதரிசியாவார்"

இன்னும் எண்ணற்றோர் தம் துன்ப இதயத்தின் கண்ணீர்த் துளிகளை உதிர்த்தழுதனர். என்றாலும் அந்தப் பூமானின் பொன்னுடல் எரிந்து கரைந்து காற்றோடு போய்விட்டது.

கலங்கி நிற்கும் நமக்கு வழிகாட்டும் திறன், அவரது புகழுடல் ஒன்றிற்கே உண்டு.

–நமது மதுரை நிருபர் **இளங்கீரன்**

# குறள் கூறும் ஐயநெறிக் கொள்கை

மனிதரின் நல் வாழ்விற்கென்றே நவிலப்பட்ட நயமுறு எண்ணங்களின் தொகுப்பு திருக்குறள் ஆகும். இன, மொழி, இட வேறுபாடின்றி நிலையுறு நற் கோட்பாடுகளை எடுத்தியம்ப முயலுகிறது முப்பால் எனப்படும் திருக்குறள்.

வள்ளுவரின் குறட்பாக்கள் பல நெறிகளைப்பற்றி இங்கும் அங்கும் சுட்டிச் செல்கின்றன. அவரது சமயம் இன்னதெனத் தெளிய இடர்ப்பாடுகள் மிகுதி. அவர் யாத்த குறள் பல சமய நெறிகளுக்கு அடிப்படையான சிற்சில கருத்துக்களை ஏற்றிப் பொருள் மிளிர்கிறது அப்படிக் கையாளப்பெறும் சமயச் சார்புள்ள சொற்கோவையினின்றும் வள்ளுவரது சமயம் என்ன என்று அறுதியிட இயலவில்லை. ஆயினும் அவருடைய சமயத்தின் சாயல அல்லது ஒரு கோணம் இதுதான்என்றும் புலப்படாமலில்லை. முகமனுக, முதல் அதிகாரத்தில் வாலறிவன், மலர்மிசை ஏகினான், தனக்குவமையிலாதான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், அறவாழியந்தணன்என்று ஆண்பாற் குறிப்பில் பல சொற்களைப் பெய்துள்ளார். முதற் குறளில் வரும் 'ஆதி' என்னும் சொல்லை உலகை இயற்றும் கடவுள் என்றும், முழுமுதற் காரணம் (The First Cause) என்றும் கொள்வதுண்டு. வாலறிவன் முறிவற்ற அறிவுடையவன்; மலர் மிசை ஏகினான்-கமலத்தின் மீது துஞ்சும் திருமால், அல்லது புத்தன் அல்லது மும்மலம் முறுக்கிய மூத்தோன் என்று முறையே பொருள் கூறப்படுவதுண்டு. எண் குணத்தான், பொறிவாயில் ஐந்தவித்தான் என்றெல்லாம் வருஞ் சொற்கள் கடவுளின் பல்வேறு நிலைகளைப் பெருமிதமாய்க் கூறும் விளக்கங்களாகும். எண்குணத்தான் என்றால் தோற்றம், அறிவு, வன்மை, பரவல், நிறைவு, ஒன்றின்மை, முழுமை, நன்மை எல்லாம் பொருந்திய மேலோன் என்றும், மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களை அடக்கிய கர்மவீரன் எனபதால் பொறிவாயில் ஐந்தவித்தான் என்றும் கூறப்படும்.

தமிழ்நாட்டைச் சூழ்ந்த சமயப் பண்பாடுகளின் அழுத்தம் குறட்பாக்களில் தெரிகிறது. ஆரியத்தில் திருத்தம் காண விழைந்த புத்தரும், அவருக்கு முந்திய சமண சமயச் சார்புகளும் நன்கு புலப்படுகின்றன. எந்த நெறியினரது கை மேலோங்கியிருந்தது என்பதற்குக் குறள் போதுமான சான்றாயில்லை ஏறத்தாழ எல்லாச் சமயங்களுக்கும் சமநிலையான சொல்வளப் தான் காணப்படுகிறது. நற்சிந்தனைகளை வரவேற்கும் பரந்தநோக்குப் பாங்காய்த் தென்படுகிறது சமயங்களின் ஆர்த்தெழும் அகப்போராட்டத்திற்கு வள்ளுவர் இடங்கொடாது ஒவ்வொன்றையும் சீர்தூக்கி ஓர் அளவு மட்டுமே உடன்பாடு தெரிவித்திருக்கிறார். தமிழரின் மேன்மைக்குத் தேவையான நல்லுரைகளைச் சேர்த்தும், சிற்சில சமயப் பொதுக் கருத்துக்களை ஏற்றும் தமது சான்றாண்மையைப் பயன்படுத்தியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை. நிலை தடுமாற்றமில்லாது நடுநிலைக் கோடல் யாவர்க்கும் முடிந்ததொரு செயலன்று. குறிப்பாக குறள் தோன்றிய நாளில் ஆரிய வழக்கு நன்கு வளர்ந்திருந்தது. அந்நெறியின்படிச் சிலர் மட்டுமே வேதநூல் பயிலலாம், சிலர் மட்டுமே செங்கோலோச்சலாம், சிலர் மட்டுமே வணிகம் நடாத்தலாம் என்று விதிக்கப்பட்டது. நான் மறை நூல்களின் ஏற்பாடுகள் அவை. எனினும் வள்ளுவர் அதை யுள்ளுணர்ந்து அறிவின் தடை நீக்கத் துணிந்தார்; சாதியைக் கடிந்தார். மெய்ப்பொருள் காண்பதறிவு என்றார். பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் என்றார். ஞான சாகரத்தில் கலஞ் செலுத்த எவர்க்கும் வழியுண்டு. அதே போற் சிந்தனை வானிற் சிறகு தட்டிப் பறக்கவும் இடமுண்டு என்று கூறிய மேதை இங்கர்சாலின் கூற்றுக்குச் சான்றானார். (Out on the intellectual sea there is room enough for every sail. In the intellectual air there is space enough for every wing). பரந்த நோக்குமுள்ள திருவள்ளுவரின் பொதுமையுள்ளம் புதுமையையும் நாடி நின்றது. அதன் திறன் கண்ட சிலர் குறளை ஏசுநாதரின் மலைவாசவுரைக்குப் பொருத்திப் பெரிதும் மகிழ்ந்தனர் என்றால் அதன் அறமுறை நயமென்பதற்கு இரண்டுபட்ட கருத்து இருக்க இடமில்லை.

வள்ளுவரின் குறளிலிருந்து அவரைத் தூயவொரு நாத்திகரெனத் துணிதற்கில்லை. அவர் "ஆதி பகவன் முதற்றே யுலகு" என்று சொல்லைத் தமது நூலைத் தொடங்குகிறார் உலகின் தோற்றம் ஒரு மூலவனைக் கொண்டது என்று நம்புகிறார். நாத்திகர் அம்மூலவனை இல்லையென மறுப்போராவர். எந்தச் சமயமும் கூடாதென வன்மையாய் எதிர்ப்பவர்கள். வேதம், ஆகமம், கன்மம், ஊழ், கடவுள் எல்லாம் அடியோடு மறைத்தொழிக்கப்பட வேண்டியவை எனும் கடுமை நோக்குடையவர்கள். ஆகலின் வள்ளுவரை இவரோடு பிணைத்தல் பொருந்தாது எனலாம். கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தையே வள்ளுவர் இயற்றவில்லையென்று வ. உ. சி போன்றவர்கள் கருதினார்கள் என்றாலும் பிற்பட்ட அதிகாரங்களிலும் இறைவனைச் சார்ந்த பல சீர்கள் காணப்படுகின்றன என்பதிற் கருத்து வேற்றுமைஇருப்பதற்கில்லை. 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும' என்ற குறளை ஈண்டு நோக்கலாம்.

அடுத்து வள்ளுவரைப் பொருண் முதல் வாதியெனப்படுவோரோடும் (Materialist) ஒன்றாய் இணைத்து விடுதற்கில்லை. பொருண் முதல் வாதிகள் சமய வாதங்களை அறவே புறக்கணித்துவிட்டு எதற்கும் காரணம்-விளைவு உண்டு எனத் துணிவர். உலகின் தோற்றம் குறிப்பிட்ட ஒரு பொருளிலிருந்து முறையாய் வந்ததோர் ஒழுங்கு நிலை (Cosmos) என்பார்கள். ஆண்டவன் சூன்யமயமானவன் என்றால், தத்துவாசிரியரும் புத்தருக்கு முந்திய சித்தாந்தியுமான கபிலர் சொன்ன சாங்கிய சாத்திரப்படிச் சூன்யத்திலிருந்து சூன்யம் தான் வெளி வரமுடியும்; வேறு எதுவும் அதிலிருந்து வரமுடியாது என்ற கூற்றை உறுதிப்படுத்துவார்கள். உலகில் எதையும் அளந்து பார்க்கமுடியும் என்பார்கள். விதி; கரும வினையெல்லாம் வெறுங் கற்பனைச் சொற்கள் என்று விளக்கிக் காட்டுவார்கள். ஊழ்வினை யகற்ற யாராலும் முடியாது என்ற நம்பிக்கை வள்ளுவருக்கு உண்டு. ஊழ் எனுந் தலைப்பில் பத்துக் குறட்பாக்களை அவர் யாத்துள்ளார். ஆகலின் வள்ளுவரைப் பொருண் முதல்வாதியாரோடு ஒப்பு நோக்கி அதில் முற்றிலும் அவர்க்கு உடன்பாடு காணுதல் சாலாது.

மற்றும் சில பௌத்த நெறிகளை வள்ளுவர் சுட்டிச் செல்வதினின்றே அவரைப் பௌத்தரெனக் கூறிவிடல் ஏற்காது. பௌத்தம் உலக வாழ்விற் பற்று, பாசம், உறவெல்லாம் அறவே நீக்கித் தூய துறவு நிலையெனும் நிருவாணம் பெறுதலே இறுதிப் பயன், இணையற்ற இன்பம் எனக் கூறியது. வள்ளுவரோ இன்பத்துப் பாலுக்கென்று இருநூற்றைம்பது பாக்கள் யாத்துள்ளார். மக்கட் பேறு மாபெரும் இன்பம் என்றார். அரசு, அமைச்சு, நாடு, வீடு எல்லாம் வேண்டுமென்பார். அன்பால் மக்களை ஒன்று சேர்க்க விழைகிறார். வாழ்வை வெறுப்போடு நோக்கவில்லை. உலகியலில் வேண்டா நிலையைப் புத்தர் கூறியதைப்போல் வள்ளுவர் வற்புறுத்தவில்லை. துறவறவியலில் அவாவுடைமை, புலால் மறுத்தல், தவம், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்று பல அதிகாரங்களிலும் உயரிய ஞானநிலைக்கான இயல்புகளாய்த் தான் வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். உலகியல வாழ்க்கையிலிருந்து கொண்டே அடையும் தனி முயற்சிகள் தாம் அவை. பொறுப்பு நீக்கித், தன்னலம் பேணி, வீட்டுலகம் அடையும் முறையைக் குறள் போற்றவில்லை. மேலும் புத்தர் வேதங்களின் அடிப்படைகளை மறுத்தார். குறள் அங்கே செல்ல விரும்பவில்லை. மறுபிறவி, ஊழ்வினையெல்லாம் பொய்யென்றார் புத்தர். ஆரியர் பழக்கங்கள் பலவற்றைப் புத்தர் வெளிப்படையாய்க் கடிந்து ஓர் இயக்கமாய்ச் செயல்படும் அளவிற்குத் தர்க்கம் நிறைந்த தத்துவங்களை வழங்கினார். வள்ளுவர் சில நெறிகளை மட்டுமே எண்ணத்தில் ஏற்க வாய்ப்பிருந்திருக்கிறது சாதியொழிப்பில் வள்ளுவர் புத்தரோடு ஒன்றுபடுகிறார் என்பதற்குப் 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்ற குறளைச் சான்றாய்க் கொள்ளலாம்.

சமணக் கருத்துகள் பௌத்த சமயத்திற்குச் சற்று முந்தியவை. இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை என்னும் குறள் அதிகாரங்கள் சமணச்சாயலை ஓரளவு காட்டுகின்றன. எல்லா உயிரினங்களிடத்தும் அன்பு காட்டுவதை வள்ளுவர் பெரிதும் வரவேற்கிறார். வள்ளுவருக்கு விதிப்பயனில் நம்பிக்கை தெரிகிறது. ஆண்டவன் என்ற நிலையில் ஒருவனே என்னும் கருத்தும், சமய மரபு என்ற நிலையில் சில சீர்திருத்தங்களோடு இயைந்த பல முறைகளும் வள்ளுவரிடத்துக் காணப்படுகின்றன.

வள்ளுவர் தம் நூலில் ஆண்டவனையும் அறிவையும் ஒருங்கே போற்றுகிறார். வாலறிவன் என்றவர் அங்கே இறைவனை அறிவின் ஒளிப் பிழம்பாய்க் காணுகிறார். ஆன்மாவையும் அதன் அழியாத் தன்மையையும் நம்புகிறார். காட்டாக, நிலையாமை என்னும அதிகாரத்தில் உயிரின் அழியாத் தன்மையையும் யாக்கை நிலையாமையையுஞ் சுட்டுகிறார். உடலுக்கும் உயிருக்கும் என்ன உறவு? அற்பம்! கூட்டைத் தனியே விட்டுத் தான் மட்டும் வெளியேறி விடும் தன்மை படைத்தது உயிர்.

**வே. சௌந்தரராசன்**

ஏதோ பறவைகள் கூடுவிட்டுக் கூடு மாறும்பொழுது சொல்லிக் கொண்டு முதலில் வருவதுமில்லை, பின் வெளியே செல்லும்பொழுது அக்கூட்டினிடம் விடை பெறுவது மில்லை என்னும் இக்கருத்துப்பட,

"குடம்பை தனித்தொழியப்
புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

என்று நவில்கிறார். மேலும் இப்படியே மாறி மாறிச் சென்றுகொண்டேயிருக்கும் உயிருக்கு நிலையான இடமே யில்லையா? என்ன? என்றும் ஐயப்படுகிறார் நோய்களுக்கிடமான உடலிற் குடியிருந்த உயிர் நிரந்தரமாய்ப் புகும் வீடுதான் எதுவோ, அறியோம் என்ற திரிபும் அவரது குரலில் தோன்றுகிறது.

முடிவில், வள்ளுவர் பண்பாளர். இயற்கை யறம் ஓம்பிய பெருந்தகையினர். அன்பினால் உலகைப் பிணைத்து அறிவின் துணையால் ஒற்றுமை காண விழைகிறார். தோழமையில் அமையும் புத்துலகங் காண விரும்புகிறார். பல்வேறு சமயங்களை நன்கு தேர்ந்து அவற்றின் சில கருவூலங்களைப் பயன்படுத்தத் துணிகிறார். எங்கும் மெய்ப்பொருளை நாடுகிறார். அறிவைமட்டுமே அவர் நம்பினாரில்லை. இறைவனையும் சேர்த்துக்கொள்கிறார்.

— 6-ம் பக்கம் —

**சந்தாதாரர்கள் கவனிக்கவும்**

"தென்றல் பொங்கல் மலர்" பெற விரும்பும் சந்தாதாரர்கள் மலருக்குத் தனியாகப் பணம் அனுப்ப வேண்டும்.

சந்தாதாரர்களுக்கு மலர் தவறாமல் கிடைக்கப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியிருப்பதால் தபால் செலவு சேர்த்து ரூ. 2-55 அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

**விற்பனையாளர்களுக்கு**

★

"தென்றல் பொங்கல் மலர்" தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணா 8 நீக்கி பிரதி ஒன்றுக்கு ரூ. 1-8-0 வீதம் பூராத் தொகையும் 30-12-59-ம் நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். முன்பணமின்றிக் கண்டிப்பாக மலர் அனுப்பிவைக்கப் படமாட்டாது. மணியார்டர் கூப்பனில் பொங்கல் மலருக்காக என்று குறிப்பிட்டு எழுதுங்கள். மலர் தேவைக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும்.

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

ஒரே பொருளை ஒரே நிலையிற் காண முடியாது. அது ஆளுக்கு ஆள், இடத்திற்கு இடம் வேறு படக்கூடும். ஒரு பொருள் கண்ணுக்குத் தோன்றுவதுபோல் உணர்ச்சிக்குப் படாது. வேறுபாடுகளும், முரண்பாடுகளும் தனித்தனிக் கோட்பாடுகளை உணர்த்துகின்றன. ஆண்டவன் மறுபிறப்பிற்கும் எதிர் வாதம் உண்டு. பொருண்முதல் வாதம் (Materialism) எண்ண முதல் வாதத்தை (Idealism) எதிர்க்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு எதிர்மறைக் கோட்பாடுகள் அனைத்தையும் ஒருங்கே ஏற்கவும் முடியாது எதிர்க்கவும் முடியாது. அவற்றுள் நல்லன மேற்கொண்டு அல்லன தவிர்த்தல் வேண்டும் என்னும் தத்துவத்தை வள்ளுவர் போற்றினுர். அதுதான் ஐயநெறி எனப்படும் (Scepticism) தத்துவமாகும். இத்தத்துவம் தனிப்பட்டதோர் சமயமல்ல என்பதைநாம் மறுத்தற்கில்லை. ஐயநெறித் தத்துவம் எந்த ஒருதத்துவச சிக்கலிலும்இதுவா அன்றி அதுவா எனும் முடிபான தீர்வின்றி ஐயத்தால் உந்தப்படும் இடை நிலையாகும். இதை ஒரு தத்துவமாகக் கிரேக்க நாட்டில் அறிஞர் பிர்ரோ என்பவர் தொகுத்துரைத்தார். அவர் வாழ்ந்து இன்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளிருக்கும். கிறித்து பிறப்பதற்கும் இருநூற்றெண்பது ஆண்டுகளுக்கு முந்தியவர் என்று தத்துவ வரலாறு எடுத்துக் காட்டுகிறது. இதை ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும் பலர் பின்பற்றினர். இவ்வகையினர் அறிவியலை ஊக்குவிக்கும் நோக்குடன் இருந்ததன்றியும் நம்பிக்கையின் வழி மேற்கொள்ளப்படும் சில எண்ணங்களையும் ஏற்க முன் வந்தனர். கணிதம், தத்துவம், ஆகிய துறைகளில் புகழ்பெற்ற மேதை பெட்ரண்ட் ரஸ்ஸலும் ஐய நெறியைப் பின்பற்றுபவர் ஆவார். அவர் ஒரு நல்ல சிந்தனையாளர். பகுத்தறிவுக் கேற்ற எண்ணங்களோடு எதையும் ஆயத் தொடங்குவார். நோபல் பரிசு பெற்றவர். இருபது ஆண்டுகளுக்கு முன் "நான் ஏன் கிறித்தவனல்ல?" என்னும் சிறு நூலொன்றை எழுதி நம்பிக்கை, பகுத்தறிவு ஆய இரண்டின் கூறுபாடுகளையும் நன்கு வாதித்துள்ளார். அதில் ஐயநெறித் தத்துவம் பாராட்டப் பெறுகிறது.

ஐயநெறியை ஆங்கிலத்தில் "Sceptic Philosophy was one of dogmatic doubt. Since nothing can be affirmed or denied the only attitude to life is one of imperturbability" என்று விளக்கியுள்ளனர்.

வள்ளுவர் மேற்கொண்டுள்ள ஐயநெறி மேனுட்டாருடைய சார்புடையதெனக் கூற இயலாது. ஒருமித்த கருத்துகள் அறிஞர்க்கு உதிப்பது இயல்பு. அம்முறையில் வள்ளுவர் தாமாகவே முயன்றுள்ள தத்துவ நிலை பிறர் தொடர்பற்ற தனித்த முறையாகும் எனலாம். எந்த ஒரு தனிச் சமயத்தையும் அடியோடு மறுத்துவிடாமலும் அன்றி முழுவதுமாய் ஏற்றுக்கொண்டு விடாமலும் செல்லும் இடைநிலை ஐயநெறியெனப்படும். வள்ளுவரது நெறியின் பயனுய் அன்று தமிழரிடையே பெரிதும் வலிவோடிருந்த ஆரியப் பழக்கங்கள், சமயப் பிடிப்புகள் எல்லாம் சற்றுத் தளர்ச்சியுறத் தொடங்கின. மற்ற சமயங்களான சைவம், சமணம், பௌத்தம் எல்லாம் புது மெருகோடு பொலிவுற்றுத் தோன்றின. வள்ளுவர் மேற்கொண்ட ஐயநெறிப் பண்பால் எங்கும் ஒரு தூய்மை யுணர்வு பரவலாயிற்று. எதிலும் விளக்கம் பெற அவாவுற்றனர் மக்கள். பல்வேறு சமயத்தினரும் தத்தம் சமய நோக்கங்களில் எழுந்த தத்துவ முரண்பாடுகளையே குறிப்பாய்க் கொண்டு ஒரு சாரார் மற்றொரு சாராருடன் பொருதாமல் அவர் தம்முள் கருத்து உடன்பாடு உள்ள அளவிற்கேனும் சந்து செய்வித்தது வள்ளுவரின் ஐயநெறிப் பண்பு. பல சமயங்களையும் ஒப்பு நோக்க இடங் கொடுத்து மக்களின் பொது அறிவை விரிவாக்கத் தூண்டியது, அது.

வள்ளுவர் தாமாக ஒரு புதுச் சமயத்தையோ, ஏதாமொரு சமயத்திற்குத் தனிச் சார்போ காட்டினுரில்லை. பேரரசர் அக்பர் பல்வேறு சமயங்களையும் ஒன்றுபட ஆய்ந்து தீன்-இலாஹி என்னும் புது நெறியைப் பொது நெறியாக்க ஆவலுற்றதைப் போன்றதன்று வள்ளுவரின் நெறி கடவுட் கொள்கையில் முடிவான ஆய்விற்றுணியாமல் இடை நின்று ஐய நெறியைத் தழுவுகின்ற ஓர் தத்துவமாகும்.

குறளின் இப்புது நெறி அதனையடுத்து வந்த இலக்கியங்களையும் ஈர்த்தது. சிலப்பதிகாரம் யாத்த இளங்கோவடிகள் ஒரு துறவி. அவர் தமது நூலில் பல கருத்துக்களை மேற்கொண்டு அழகு நடையில் அருமைக் காப்பியம் சமைத்தார். ஆயினும் இளங்கோவின் சமய நெறி இதுதான் எனத் தெளிவதில் அறிஞர்களிடையே இன்னும் கருத்து வேற்றுமையிருந்து வருகிறது. குறளிற் காணப்படுவது போன்றே பொதுமை யுணர்ச்சிச் சிலப்பதிகாரத்திலும் பரவலாய்க் காணப்படுகிறது. நூலின் இறுதியில் வரந்தரு காதையில் இளங்கோ அற நெறிகளைச் சுருக்கிக் கூறும் தன்மையில்,


பரிவும் இடுக்கணும்
   பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின்
   தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின்
   புறஞ்சொற் போற்றுமின்
ஊனுண் துறமின்
   உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்மின்
   தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின்
   தீநட் பிகழ்மின்...

என்று அடுக்கிக்கொண்டே செல்கிறுர். அறநெறிக் கருத்துக் குவியலாய்ச் சிலப்பதிகாரம் ஒளிர்கிறது. வேறு எந்தச் சமயக் குறிப்பும் நூலின் இறுதியில் வேண்டப்படவில்லை. ஆகலின் வள்ளுவரது ஐயநெறிப் பண்பு (Scepticism) இளங்கோவையும் இணைத்துவிட்டது எனலாம்.

அத்துணைச் சிறப்பும் குறள் பெறக் காரணம் அதன் ஐயநெறிக் கொள்கையே ஆகும் என்பதில் ஐயமில்லை.




## இரும்புத் திரை!



ஜெமினி வாசனின் டைரக்சனில் வரவிருக்கும் திரையோவியமான "இரும்புத் திரை"யில் சிவாசி கணேசனும் வைசயந்தியும்.

உலகியல் வாழ்வில் தாயும் மகளுமான வசுந்தராதேவியும் வைசயந்திமாலாவும், இப்படத்திலும் தாயும் மகளுமாக நடிப்பது ஒரு புதுமை.

## "நோய்" பெற்ற குறள்கள்.

★

இதுகாறும் குறள் போட்டிகளில் அளவிறந்த ஆர்வம் காட்டிய தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, நோய் பெற்ற குறள்களின் எண்களை மட்டும் கிழே தந்திருக்கிறோம்:

206, 261, 315, 320, 359, 360, 442, 848, 851, 853, 941, 946. 947, 948, 1091, 1102, 1147, 1159, 1160, 1161, 1162, 1174, 1175, 1176, 1200, 1226, 1227, 1241, 1255, 1266, 1280, 1301, 1303.

திங்கள் இருமுறை மலரும்
"தங்க மலர்"
துட்டர்களின் கொட்டமடக்கத் துப்பாக்கி யேந்தி
★ வெல்லும் சொல்லால் கொல்லும் பகையை!
★ சாடும் புயலாய்ச் சீறிக் கிழிக்கும் இழிவை!
★ நாளிதழ் அளவில் நாடு செழிக்க வரும்!
விவரங்கட்கு:
பொறுப்பாளர்— "தங்க மலர்"
சென்னை-17.

## காரைக்குடி-
## திருக்குறட் கழகப் போட்டி

காரைக்குடி திருக்குறட் கழகத்தார் தம் எட்டாம் ஆண்டு விழாவை யொட்டிக் கீழ்க்கண்ட போட்டிகளை நடத்துகின்றனர்.

| போட்டிகள் | - முடிவு நாள்: |
|---|---|
| கட்டுரைப் போட்டி | 25-1-'60 |
| கவிதைப் போட்டி | ,, |
| நாடகப் போட்டி | ,, |
| ஓவியப் போட்டி | ,, |

திருக்குறள் ஒப்பித்தல்- கட்டுரை எழுதுதல்- பேச்சு வன்மைப் போட்டிகள் } இம்மூன்றும் 17—1—60-ம் நாளன்று, மீ. சூ. உயர் நிலைப்பள்ளி (காரைக்குடி) யில் நடைபெறும்.

இவைபற்றி மேல்விவரமறிய, "செயலாளர், திருக்குறட் கழகம், நவயுகப் புத்தகாலயம், காரைக்குடி" என்ற முகவரிக்கு எழுதுக.

எப்போட்டிக்கும் கட்டணம் கிடையாது.

# ஆசிரியத் தோழமைக்கு.

ஐயா கவிஞரே !

முல்லேயில் 'நான்' என்ற தலைப்பினில் நீர் "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பது பேதமை. அதை வள்ளுவன் சொல்லியிருந்தால் என்ன, எவன் சொன்னால்தான் என்ன ! பேதமை பேதமையே ! உலகம் திருடினால், நானும் திருட வேண்டுமா ?..." என்று எழுதி இருந்தீர். படித்ததும் நான் மிக மிக வெட்கப்பட்டேன் ! நீரே இவ்வாறு எழுதி இருந்தமைக்கு. வள்ளுவர் சொன்ன 'உலகத்தோடு' என்பதன் பொருள் 'உலகிலுள்ள உயர்ந்த மக்களோடு' என்பதே. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பதனை மறந்துதான் நீவிர் அவ்வாறு எழுதினீரா ? என் ஐயத்தை அகற்றுவீரா ?

—கோவை-பாமா, சு. புரம்.

[விளக்கம் நன்றே. உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாறு ஒழுகுதலையே வள்ளுவன் குறித்தான். இதனை நானும் அறிவேன். அறிந்தே பேதமை என்றேன். காந்தி உயர்ந்தவர்; அவர் போல் நானும் ஒழுகுவதாயின் அவர் பாடிய 'ராம்துன்' பாட்டைப்பாடி, முழந்துண்டு கட்டி வாழ வேண்டுமென்பதும் அதில் அடங்குவதாகக் கொள்ளவேண்டும். எனக்கு ஏன் அந்தத் தலையெழுத்து ?

ஆச்சாரியார் உயர்ந்தவர்; அவரோடு ஒட்ட ஒழுகுவதாயின், சோசலிசத்தை வெறுத்தாக வேண்டும்.

—இப்படி ஒவ்வொரு உயர்ந்தவரிடமும் எனது தத்துவம் முரண்படும்போது, ஒட்ட ஒழுகுதலிலேயே எனக்கு வெறுப்பு ஏற்படுவதிலும், அத்தத்துவமே பேதமை என்று நான் கருதுவதிலும் என்ன தவறு ?

'உயர்ந்தவர்' என்ற சொல்லுக்கு இலக்கணமாய குணங்கள் எவை ?

அச்சொல் மனிதர்களின் தனி வாழ்க்கையை முன்னிட்டு எழுந்ததாயின் அதிலும் நான் முரண்படுகிறேன்.

மிக உயர்ந்தவர் ஒருவர்; பிரமச்சரியமே சரியான ஒழுக்கம் என்று கருதுகிறார். அவரோடு நானும் ஒட்டி ஒழுக வேண்டுமா ?

மற்றொரு உயர்ந்தவர்; ஆட்டின் பாலும் வேர்க்கடலையும் உண்பதே ஒழுககம் என்கிறார். என்னால் முடியுமா ? எனக்குத்தான் எதற்கு ?

உயர்ந்தவர் இலக்கணம் என்ன ?

ஒழுக்கம்-எவ்வெவ்வகைப்படும் ?

—வகையும் வழியும் தெரியாமல், எதில் எப்படி ஒட்டி ஒழுகுவது ? பொது வாழ்க்கையிலாயினும், தனி வாழ்விலாயினும் 'செம்மையுற வாழ்' என்று சொன்னால், நிலைமைக்கேற்பக் கைக்கொள்ளமுடியும். உலகத்தோடு ஒட்டு என்றால், என்ன பொருள் ?

உரைவிளக்க ஆசிரியர் சிலர், "அறநூல் சொன்னவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழிந்து, சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான், அவையும் அடங்க 'உலகத்தோடொட்ட' லென்றும், கல்விக்குப்பயன் அறிவும்,அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாகலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார், 'பல கற்றும் அறிவிலாதார்' என்றும் வள்ளுவர் கூறினர்" என்கின்றனர்.

குறளைக் கேட்டுக் குழம்பியவன் முன், பொருளை விரிக்கப் போந்தவர் இவர்.

இக்காலத்திற்கு ஏலாதது, சைவ சித்தாந்தம், கடவுட் கொள்கை என நான் கைவிட்டால், 'உயர்ந்தவர்' சிலருக்குக் கோபம் வருகிறது. 'சொல்லாதனவற்றுள் ஏற்பன;'என்று யான் சொல்வன, சில உயர்ந்தோருக்கு முரண்பாடாகின்றன.

ஒவ்வொரு நூலிலிருந்தும், ஒவ்வொருவர் வாழ்விலிருந்தும், நீ விரும்புவன எடுத்து, ஒட்ட ஒழுகு என்பதாயின், நான் கேட்பதெல்லாம், நான் ஏன் எடுத்துக்கொண்டு ஒட்ட வேண்டும்;முழுக்க முழுக்க எனக்குச் சரி என்று படுகின்ற வழியில் நான் ஏன் போகக்கூடாது என்பது தான்.

'பிறர் திருடினால் நானும் திருட வேண்டுமா ?' என்று நான் கேட்டது, வெறும் திருட்டைக் குறித்தல்ல; வழிமாற்றத்தைக் குறித்து, முழுக்க முழுக்க ஒழுகும் முறையில், என்னை நானே கண்காணித்துக்கொள்ள விழைகிறேன். அவ்வளவுதான்.

நான் வள்ளுவனை வெறுப்பவன் என்று நினைக்கிறார், நண்பர் ?

முரண்பாட்டை. முரட்டுத்தனமாகச் சுட்டினேன். அவ்வளவே!

"வள்ளுவன் சொன்னமாதிரி நான் நடக்கவில்லை; நான் நடக்கிறமாதிரி சிலவற்றை முன்னாலேயே வள்ளுவன் சொல்லியிருக்கிறான்"-இப்படிச் சிந்திக்கிறது எனது நான் தன்மை.

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
எப்பொரு ளெத்தன்மைத்
தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

—ஆசிரியர்.]

★

ஐயா,

பழம் பாடல் வரிகளை எடுத்தாள்வது தவறு என்று தென்றலில் வந்த கட்டுரைகளைக் கண்டேன். கவியுலகைப்பற்றி அறியாத் தறுதலைகளுக்கு ஓர் சூடு. இனியேனும் அவர்கள் திருந்துவார்களாக. இதோ மேலும் ஓர் உதாரணம். தமிழறிஞர் திரு கி. வா. சகந்நாதன் எழுதிய "ஒரு சாண் வயிறு" (கலைமகள் வெளியீடு) நூலில் 36-ம் பக்கத்தில் 3-வது பத்தி.

"ஒரு புலவன் ஒரு கருத்தைச் சொல்லியிருப்பான். அதைக் கண்ட வேறொரு புலவன் அதே கருத்தைப் பின்னும் மெருகிட்டுப் புனைந்து புதிய கவியாக்கிவிடுவான். இது கவி பரம்பரையிலே வரும் வழக்கம். பழந்தமிழ் நூல்களிலே மூலையில் இலைமறை காய்போலக் கிடக்கும் ஒன்றையெடுத்து அதற்கு அழகிய நிலைக் களனமைத்து விரித்து ஒளியூட்டிச் சுவைப் பிழம்பாக்கும் சிற்பத் தொழிலிலே வல்லவன் கம்பன். பாரதியாரும் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவரே"—இவ்வாறு திரு. கி. வா. ச. அவர்களே கம்பனைப்பற்றியும் பாரதியைப்பற்றியும் கூறுகிறார். கண்மூடிகள் காண்க.

மேலும் அசோக்குமார் படத்தில் வரும் பாபநாசம் சிவன் (அப்படியென்றே நினைக்கின்றேன்) அவர்கள் எழுதியுள்ள, பாகவதர் பாடும் "கல்லினுட் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் புல்லுணவே தந்து போற்றும் நம்நாதன்" என்னும் வரிகள் தேவராசப் பிள்ளையவர்களின் "குசேலோ பாக்கியானம்" நூலிலுள்ள பின்வரும் பாடலின் அப்பட்டமான காப்பி.

"கல்லினுள் சிறு தேரைக்கும்
கருப்பையண்டத்து யிர்க்கும்
புல்லுணவளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி
யண்ணல்
வுல்லும் நின் மைந்நர்க் காவாது
ஒழிவனோ ஒழியான் உண்மை..."

இது சுசிலையிடம் குசேலர் கூறுவதாக வந்துள்ளது. இதுவும் திருட்டு என்று ஒப்புக்கொள்வார்களா ? உலுத்தர்கள் உணர்க.

அன்பன்

வே. கணபதி சுப்பரமணியன்,
தென்காசி.

தென்றல்
பொங்கல் மலர்
1960.

திராவிடரின் இல்லந்தோறும்
மணங்கமழ வருகிறது !

டாக்டர் அ. சிதம்பரனார்
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
பன்மொழிப்புலவர்
கா. அப்பாத்துரையார்
பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
பேராசிரியர் தேவநேயப் பாவாணர்

ஆகிய பலரின் அரிய
ஆராய்ச்சிக் கட்டுரைகள் !

அறிஞர் அண்ணா
நாவலர் இரா. நெடுஞ்செழியன்
பேராசிரியர் க. அனபழகன்
கே. ஏ. மதியழகன்
டி. கே. சீனிவாசன்
மா. கி. தசரதன்
சிந்தனைச்சிற்பி சி. பி. சிற்றரசு

ஆகிய பலரின் இனவெழுச்சிக்
கட்டுரைகள் !

கே. ஜி. இராதாமணாளன், முல்லை சத்தி, சுப்பு ஆறுமுகம், நாக. முத்தையா, நீலமலையான் முதலியபலரின்

சுவைசுவையான சிறுகதைகள் !

வாணிதாசன், சிவனடியான், முடியரசன், தமிழண்ணல், மயிலை சிவமுத்து முதலிய பல கவிஞர்களின்

கற்பனை நிறைந்த வண்ணக்
கவிதைகள்.

இவற்றோடு

ஆசிரியர் கண்ணதாசன் எழுதும்,
'கல்லறை' — வினா-விடை நூறு !

ஏறக்குறைய 200 பக்கங்கள்

விலை ரூபாய் ~ உ

தென்றல் ~ சென்னை.6.

— 8-ம் பக்கத் தொடர்ச்சி —

மடம் கட்டும் எண்ணத்திற்கு ஐதாராபாத்திலேயே முழுக்குப் போட்டுவிட்டு, ஊர் திரும்பி விட்டாராம். இனி ஆச்சாரியாரும் அந்த வழியே திரும்புவார் என்றால் அது தவறில்லையாம். பணம் தரும் பம்பாய் வள்ளல்கள் கட்சியின் தலைமை அலுவலகத்தை. பம்பாயிலேயே வைத்துக்கொள்ள நினைக்கின்றனராம். பம்பாயில் சுதந்திரக் கட்சி அமைக்க முயன்ற நாளிலேயே அவருக்கும் முன்சிக்கும் கருத்து வேறுபாடுகள் தலைக்காட்டியிருக்கின்றன. இப்போது அவை வளர்ந்திருக்கின்றன. எனவே மாப்பலத்து "முனிவர்" சுதந்திரக் கட்சியை விட்டு விரைந்து விலகினாலும் வியப்பதற்கில்லை.

நாடகமே உலகம். நானை நடப்பதை யார் அறிவார் ? ★

# செழியன் உலா

"மாணவர்களை அரசியலுக்கு இழுத்துக் கெடுக்கின்றனர்!" என்று மேடை தோறும் மாற்றுக் கட்சியார் மீது வசைபாடி மாணவர்களுக்காகக் கண்ணீர் வடிப்பதில் கைதேர்ந்தோர் காங்கிரசார். அப்போது பொங்கும் கண்ணீர் வெள்ளம், பாலாற்று வெள்ளத்தையும் தோற்கடித்துவிடும். இப்போது அந்தக் கண்ணீர் வெள்ளக்காரர்கள் அதே மாணவர்களை-கல்லூரிகளுக்கு வரும் மாணவர்களைக் கெடுப்பதில் முன் நிற்கின்றனர். நாகர்கோவிலில் அண்மையில் மத அடிப்படையில் எழுந்தது ஒரு கல்லூரி. அங்கே எம். ஏ. வகுப்பில் தாய் மொழிப் பிரிவுக்கு இவ்வாண்டுத் தொடக்கத்திலிருந்து பேராசிரியர் எவரும் இல்லை கடந்த ஆண்டுவரை இருந்த பேராசிரியர் மதுரையில் ஒரு கல்லூரிக்கு மாறிப் போய்விட்டார். உடன் வேறொருவரை நியமிக்க வேண்டிய கல்லூரிக் குழு, வந்த மனுக்களையும் சரிவரக் கவனிக்கவில்லை. பல்கலைக் கழகத்தாரும் அதைப்பற்றி அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் கடந்த ஏழு திங்களாகப் போதிய பயிற்சியின்றி மாணவர்கள் படும் துயர் சொல்லிமுடியாது. அவர்கள் வேலை நிறுத்தமும் செய்து பார்த்துவிட்டுச் சலித்துவிட்டனர் பல்கலைக் கழகத்தாரை "ஆட்டி வைக்கும்" திறமை படைத்தவரெனக் கூறப்படும் கல்வி அமைச்சரும் இதைப்பற்றிக் கவலைப் படவில்லை?

இதே கதைதான் சென்னை பல்கலைக் கழகத்திலும் நடக்கிறது. புகழ் வாய்ந்த இக்கழகத்தில் கடந்த நான்கு திங்களாக எம். எஸ்சி. வகுப்பில் ஒரு பிரிவிற்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இல்லை ஏற்கனவே இருந்தவர் அமெரிக்காவுக்குப் பறந்து விட்டார், கல்லூரி மாணவர்களைக் காற்றில் பறக்க விட்டு விட்டு. அடுத்த ஆளை நியமிக்க வேண்டியோர் ஏனோ கவலைப்படாது உள்ளனர். இந்தப் பாடம் சென்னை மாநிலத்திலேயே மாநிலக்கல்லூரி ஒன்றில் தான் இருப்பதால் பல வெளியூர் மாணவர்கள் ஆயிரம் இரண்டாயிரம் என்று செலவழித்து வந்து படிக்கின்றனர். இப்போது பேராசிரியர் இல்லாததால் அவர்கள் படும் அல்லலைச் சொல்லமுடியாது. ஆனால் சென்னை மாநிலக் கல்வி அமைச்சு இதையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் வேந்தரான கவர்னர் பெருமானுகிலும் இவற்றைக் கவனித்து ஆவன செய்வாராக.

அன்றேல், "மாணவர்களை அரசியலுக்கு இழுத்துக் கெடுக்கும் மாற்றுக் கட்சியாரை"விட, வரும் மாணவர்களுக்குச் சரியாகப் பாடம் சொல்லித் தராது வதைக்கும் நீங்கள் பெரும் பழியைத் தேடிக்கொண்டோராவீர்.

x x x


காங்கிரசு மாடு புல்லைத் தின்று, கொடியைத் தின்று, மனிதரைத் தின்று, அத்தோடு நில்லாமல் அரசாங்கத்தையும் தின்று வருகிறது இதை நாம் சொல்லும்போது எரிந்து விழுந்து சீறிப் பாய்வது காங்கிரசார் வழக்கம். கெய்ரான் திருவிளையாடல், இராசத்தான் ஊழல்கள் முதலியவற்றை நாடறியும். வருமான வரி தராதேமாற்றிய பிர்லா, தன் மாளிகையில் காந்தியாரைத் தங்க வைத்துத் தன் குற்றங்களை மறைத்துக் கொண்டதாக, தீபசோதி வர்மன் எழுதியதை நாடறியும். முந்திரா போன்ற முதலைகள் காங்கிரசுக் கட்சிக்கு நன்கொடை தந்து, அரசை ஏமாற்றியதையும் நாடறியும். இவர்களெல்லாம் அக்கட்சிக்கு அப்பாற்பட்டோர். ஆனால் காங்கிரசைச் சேர்ந்தோரே காங்கிரசு அரசை ஏமாற்றுவது இத்தனை நாளும் மறைக்கப்பட்டு வந்தது. இன்று அதுவும் படிப்படியாகவெளியாகிறது. கோடீசுவரர் சே. என். பாவ்ரி ஒரு காங்கிரசுக்காரர். அவர் அரசினரை ஏமாற்ற முயன்றதாக சில்லாங் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் அரசை எப்படி ஏமாற்ற முயன்றார் என்பதெல்லாம் தெரியவில்லை. ஆனால் கூடிய விரைவில் இதே உணர்வுடன் காவல் துறையினர் உழைத்து பல பாவ்ரிகளை நடுத் தெருவுக்குக் கொண்டு வருவர். அப்போது பல "மன்றங்"களிலே இருக்கும் பல பேர் முச்சந்திக்கும் நடுத் தெருவுக்கும் வருவார்கள் என எதிர்பார்க்கலாம்.

x x x

ஆண்டிகள் கூடி மடம் கட்டிய கதையை "மனோன்மணி"யில் பார்த்திருப்பீர்கள். ஆனால் பதவி கிடைக்காத அரசியல் ஆண்டிகளெல்லாம் கூடிக் கட்சி கட்டினால் எப்படியிருக்கும்? சுடச் சுடக் கிடைக்கும் பதில்: 'சுதந்தராக் கட்சியைப்போல் இருக்கும்!"

பண்டித நேருவை விமர்சிக்கக் கிளம்பிக் கடைசியில் "பதவி பெறுவோம், தேர்தலில் போட்டியிட்டு!" என்று கிளம்பியவர்கள் சுதந்திராக் கட்சியைக் கண்டனர். பரம்பரை ஆண்டிகள் பொறுத்துப் போவர். பஞ்சத்தாண்டிகளுக்குள் அதை எதிர்பார்க்கமுடியுமா? மயிலாப்பூர் ஆண்டிகளும் மாம்பலத்துப் பண்டாரங்களும், பாகவதம் திருப்புகழ்படிக்க வேண்டிய நாளில் சிங்காதனம் ஏற முயல்கின்றனர். ஏணியைத் தெற்கே வைப்பதா வடக்கே வைப்பதா என்ற கேள்வியில் சிக்கல் எழுந்துள்ளது. வடக்கேதான் வைப்பது என்றதும் தஞ்சைப் பெரிய மனிதர் ஒருவர் தனி வழியே கிளம்பி விட்டாராம்.

— 7-ம் பக்கம் —




ஆசிரியர்: கண்ணதாசன் அச்சிடுபவர், வெளியிடுபவர் சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு. சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.